உ

சிவமயம்



# நினைவு மலர்

# கந்தசாமி அசோகநாதன்

சட்டத்தரணி

25 - 03 - 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# கந்தசாமி அசோகநாதன்

சட்டத்தரணி

தோற்றம்: **18-9-1948**

மறைவு: **22-2-1986**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் அசோகநாதன்
## பிரிவு தந்த
## சோகநாதம்

மதுரங்கள் பாடும் மருத வயற்பொழிலார்
சுழுமலையில் அம்மன் தூய அருள் வரமாய்
அசோக நாதன் அருங்கவிஞன் ஈழத்தினை
திசாமுகங்கள் எல்லாம் திகழும் புகழாளன்
சட்டத்தரணி தமிழ் நெஞ்சன் "செகப்பிரியன்"
சொட்டும் உணர்ச்சிச் சுவைமிக்க நாடகங்கள்
பலவும் நடித்து பலரசிக நெஞ்சங்கள்
குலவி குடிகொண்ட குரிசில் செழித்த தொரு
மரபில் உதித்தோன் | மாதா பிதா குடிகள்
பெருமை பொலிந்து பீடமர்ந்த நற்குடிகள்

சண்டிலிப்பாயின் தக்க நிலபுலங்கள்
கொண்டரசாண்ட கோமானும் மூத்ததம்பி
பொன்னுச்சி செய்த புண்ணியப்பே றனமகன்
தன்னிகரில் லாப்பண்புச் சரவணமுத் துப்பெரியோர்
அன்னவனின் காதல் அருமனைவி பொன்னம்மா
இந்நிலத்தில் ஈந்த இருபுதல்வர் தாம் கந்த
சாமி முருகே சம்பிள்ளை! தலைமகனிக்
கந்தசாமி கலைக்கல்விக் கடல்; வாழும்
சொந்த ஊராம் சுழுமலையின் இங்கிலீசுக்
கந்தசாமி யென்னக் கற்றறிந்தான் ஆங்கிலத்தை!
உந்து புகையிரத உயர்நிலைய அதிபனுமாய்
கடமை புரிந்தோன் சண்டிலிப்பாய் கவின்குடியில்
மடவாள் பாக்கிய லட்சுமியை மணங்கொண்டு
மக்கள் மூவர் மகிழ்ந்தடைந்து துணைமறைய
தக்க துணையாய் தையல்முத் தென்பாரை
நல்லோர் கூட்ட நண்ணி அவள் மானிப்பாய்
நல்லூர் உறைந்து நன்மக்கட் பேறுகளாய்
இரஞ்சிதம் என்னும் இனிய மகள் தன்னோடு
சரநாதன் அசோக நாதன் மனமோகன்
என்பாரை பெற்றான்; எழிலுற்ற இல்லறத்தை
இடையில் விட்டீசன் இணையடிகள் சேர்ந்திட்டான்!
பிஞ்சுப் பருவப் பிள்ளைகளைப் பொறுப்பாக்கி
நெஞ்சில் துயரை நீளும் நெருப்பாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் மறைய கைமைத் துயர் கொள்பூ
மணியாய் ஊர் போற்றும் மாதா நால் மக்களையும்
வறுமையுடனே வாதாடிப் போராடி
சிறுமை எதுவும் தீண்டா நெறிவளர்த்தார்!
ஈசுரநாதன் ஓங்கித் தக்கபொறி யியலாளுய்
பெருமை தழுவிப் பிறநாடு 'புருணை'யிலே
உயர் பதவி கொண்டான்! உடன்பிறப்பு அசோக்நாதன்
சட்டத் தரணி யாகித் தலைநிமிர்ந்தான்
விட்டகலாப் பாசம் மிகுந்த தம்பி மனமோகன்
இலங்கை வங்கியுப முகாமை யாளனுஞன்
இரஞ்சிதம் கணவன்நவ ரத்தினரா சாகுடும்பம்
ஈசுரநாதன் மனைவி இராஜினி சால் குடும்பம்
மனமோகன் மேவும் அமிர்தவல்லி மாண்குடும்பம்
கனிவாய்த் தழுவக் காதல்மகா லட்சுமியை
மங்கலமாய்க் கூடி 'மகிமா' மகட்பெற்று
அங்கல்வாய் தனில்வாழ்ந்தான் அசோக நாதனிவன்!
சுதுமலைச் சின்னையா துவக்கு தமிழ்ப் பள்ளி
இதமாய்க் கல்வி இளமை தனில்அளிக்க
மானிப்பாய் இந்து வழங்க உயர்கல்வி
தேனைப்போல் தமிழின் தித்திப்பில் திளைத்தவனுய்
கவிதை வெறியில் கட்டுண்டான்! நாடகங்கள்
சுவைஞர் களிக்கத் தொகையாய் நடித்திட்டான்
விளையாட்டில் வீரன். வெறியூட்டும் பேச்சாளன்,
இளம்பள்ளித்தோழர் இன்பக் 'கவர்மையம்'
கம்பன் முதற் கண்ண தாசன்வரை தந்த
செம்பா மழையில் திரிந்து நனைத்திட்டோன்
சட்டக்கல் லூரி சார்பல் கலைககழகம்
இட்டமிகு மானிப்பாய் இந்துக் கல்லூரி
ஊர்க்கவிதை அரங்கெல்லாம் ஒலித்த இவன்கவிகள்
கீர்த்தி மிகும் கவிஞன் கீதக்கவிதை தமிழ்
ஏடுபலவும் இடம்பெற்ற! இவன் நடித்த
மேடை கூட வியக்கும் பல் நாடகங்கள்
மக்பெத் ஓதல்லோ. வெனிசு நகர்வணிகன்
மிக்க சுதந்திரத்து வீரசி வாஜியென
நாடகங்கள் தம்மில் நடித்த இவனுற்றல்
நாடறிந்ததன்ருே? நம்மேதை ''கலையரசு''
மெச்சிச் சிலிர்த்தார் மெய்யாய்த்தம் மைமிடவும்
உச்சம் இவன் ஆற்றல் ஓகோ எனப்புகழ்ந்தார்!
செல்லப்பிள்ளை தாய்க்கும் சகோதரர்க்கும்
இல்லைப் பொறுப்பென் றெண்ணம்போல் சுதந்திரமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிந்தோன், சிறுபகுதி திறன்கள் வெளிப்படவே
வருந்திப் படித்து வளர்ந்தான்! சட்டத்தரணி
பட்டம் பெற்றன்! பலர்புகழ யாழ்ப்பாணம்
கிட்டும் புகழ் ஈன் கிளிகொச்சி மன்றுகளில்
தொழில்புரிந்தான் அதுவும் தொண்டாக ஏழைகட்காய்
வழியற்ற வர்களுக்காய் வாதாடும் பணிபுரிந்தான்!
புருணியிலே அண்ணன் புரியுதவித் தம்பியுடன்
கருணைமிகு மன்னை கனிவில், தனைவாட்டும்
தொய்வுநோய்த் துன்பம் சுகம்குறைந்த மனைவாழ்வுள்,
உய்ந்திருந்தான் உறு ''சொலி சிற்றர்த்'' தேர்வு
எழுத இலண்டன் ஏகத்தாய் சோதரர்கள்
வழியமைக்க அந்த வழிப்பயணம் மேற்கொள்ள
இருந்தோன் இடர்கள் குறுக்கிட்டுத் திருப்பியதால்
வருந்தித் திரும்பி வந்தோன் வாழ் அல்வாயில்
தான் வணங்கும் தொன்மை சால்பிள்ளை யார்முன்னல்
ஊன் உடம்பு சாய்த்து உம்பவர்வான் புகுந்திட்டான்!
மாண்பு மிகுந்தஅசோக் மாண்டு கிடந்தானே?
நீண்ட கவிதை ஒன்று நின்றதுவோ இடையினிலே?
இன்பியலாய் நீண்ட எழில்நா டகம்ஒன்று
'துன்பியலில்' பாதித் துண்டாய் முடிந்ததுவோ?
ஏழை மக்கள் ஏங்கி அழுதிட்டார்!
தோழர் நண்பர் துடித்தார் துவண்டிட்டார்!
அக்காள் அறிந்தார் அலறிப் புரண்டிட்டார்
புக்கார் துயர நெருப்புள் புழுவானர்
தம்பி அறிந்தான் தவித்து புலம்பிட்டான்!
வெம்பி அழுதார் வேதனையில் உறவினர்கள்!
மானிப்பாய் சோக மயமாக வெறுமையுற்ற
ஞானத்தேன் செப்புநண்ணியது தாயூரை!
முடிசூடும் வாழ்வில் முனைவிக்கப் புருணியிலே
அடியிட்டு உழைத்த அண்ணன் அருளன்னை
இடிபோலும் செய்தி ஏற்றே அறிவிழந்தார்!
மருந்து மனைகளிலே மயங்கி புலம்பிட்டார்!
இரக்கக் குணத்தால் எவர்க்கும் இனியவனாய்
நெஞ்ச மெல்லாம் நிறைந்த அசோக் நாதன்
கொஞ்சு தமிழ்க்காய் கோடிபணி செய்தோன்
தன்மானம் மிக்க தமிழினத்தின் விடிவிற்காய்
மின்னு முழங்கா வெறிமழையாய்ப் பணிசெய்தோன்
இந்நாள் எம்மோ டில்லை எனும் துக்கம்
தின்னுமல் எம்மை தின்னத் துடிக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தெமக்கு இவ்வாண்டு மாசி
பாழும் இருபா னிரண்டு பதினாளே
வீட்டு வைரவரை மிளிரும் சுதுமலையில்
ஆட்சி புரியும் அன்னைபுவ னேஸ்வரியை
மருதடியில் மன்னும் வள்ளல் விநாயகரை
பெரும்புகழ் அல்வாய் பிள்ளையார்க் கடவுளினை
தொழுது தொழுதுயர்ந்து வானம் வரையுயர்ந்த
எழுதரிய கீர்த்தி ஏங்கு அசோகநாதன்
முத்திநிலையில் முழுமைச் சுகம்காண
பக்தியுடன் ஏத்தீர் பரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசோகன் - நடிகன்

அன்பின் பொலிவோடு பவனி வந்த அசோகனின் வாழ்க்கை அகராதியில் போலிக்கௌரவம், படாடோபம், அகம்பாவம் தன்னலம் முதலிய பதங்களுக்கு இடமேயில்லை. எல்லோரிடமும் சகஜ பாவத்தோடு மிகச் சரளமாகப் பேசி உபசரித்து அளவளாவுவதில் மகிழ்ந்த ஒருவர். பிறருக்குச் சேவை செய்வதில் அதுவும் தானாகவே முன் வந்து எப்பிரச்சனையாக இருந்தாலும் எதிர்கொண்டு இன்னலகற்றி அவர்களது இன்பத்திலும் துன்பத்திலும் இரண்டறக் கலந்த அசோகனின் அகால பிரிவு பேரிடிதான் ஆனால் புகழ் பெற்ற பல கலைஞர்களைப் போல் தன் சாதனைகளை வாழ்க்கையின் நடுப்பகுதிக்குள் ஓரளவு நிறைவேற்றிய அசோகன் தனது 38 வயதிற்குள் ஓரளவு பூரண வாழ்வை வாழ்ந்து முடித்துக் கொண்டான் என்ற நினைவு ஆறுதலைத் தருவதொன்றாகும்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி இல்ல நாடகங்களில் பங்குபற்றி அதில் பெற்ற அநுபவங்களைப் பாடசாலை விட்டு வெளியேறிய பிறகும் பூரணமாகப் பயன்படுத்தி தொடர்ந்து பல வருடங்களாக கல்லூரியின் சந்தரர் இல்லம் மேடையேற்றும் நாடகங்களுக்கு நெறியாளராக பொறுப்பேற்றமை போற்றத்தக்கது. இதனால் தனக்கென ஒரு தனி இடத்தை நாடக உலகில் நிலைநாட்டிக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. 1967ம் ஆண்டு வாகீசர் இல்லம் மேடையேற்றிய ''சிம்மம் சாய்ந்தது'' என்ற ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனது வரலாற்று நாடகத்தில் அவர் ஏற்ற 'ஆராச்சி'' பாத்திரம் இன்னும் என் நினைவில் நிலைத்து நிற்கின்றது. 1978ம் ஆண்டு அவரது நெறியாள்கையில் மேடையேறிய அவர் எழுதிய ''கீறல்கள்'' என்ற நாடகம் சிறப்பாக அமைந்ததோடு பலரின் பாராட்டுக்களையும் பெறத் தவறவில்லை. அவர் தமிழிலே சுவை குன்றாமல் வசனங்களை வலிமையுடன் விறுநடை போடச் செய்து மேடையேற்றிய நாடகங்கள் பல உள. மற்றும் அவர் கல்லூரி நாட்கள் தொடங்கி எழுதிய பல கவிதைகள் கல்லூரி சஞ்சிகைகளிலும் இடம்பெற்று வந்தமை போற்றத்தக்கது. பிறந்து, வளர்ந்து தன்னைப் பொறுத்தவரை தன் பங்கினை நன்கு நடித்து விட்டு நாடகம் முடிந்ததும் நடிகன் மேடையை விட்டு இறங்கி விடுவது போல உலக மேடையிலிருந்து நீங்கிவிட்டார். நாம் என்றும் அவரது நடிப்புத் திறமையைப் பற்றி பேசிக் கொண்டே தான் இருப்போம். அவரைப் பிரிந்து வருந்தும் எல்லோருக்கும் என் மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

S. T. சாரி Bsc. (அண்ணாமலை)
(இளைப்பாறிய அதிபர்)
மானிப்பாய் இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

எனது நண்பன் கந்தசாமி அசோகநாதன் ஆரம்பத்தில் எனது சட்டக்கல்லூரி மாணவனாக எனக்கு அறிமுகமானார். பின்னர் சட்டத்துறையில் சக சட்டத்தரணியாகப் பழகினார். அவர் தமிழ்ப்பற்றும் பொதுசேவை உணர்ச்சியும் உடையவர். உடன் கவிதைகள் இயற்றும் ஆற்றல் படைத்தவர். மற்றவர்களைக் கவரும் முறையில் சொல்வதை செப்பமாக கூறும் ஆற்றல் படைத்தவர். அவருடன் பேசுவது மற்றவர்களுக்கு பயனையும் மகிழ்ச்சியையும் தரும். இத்தகைய அரிய குணங்களுடன் பழகும் எனது நண்பனை நாம் இளமையில் இழந்து விட்டது எமது துர் அதிர்ஸ்டமென்றே கூறலாம்.

அன்னாரின் மறைவால் சட்டத்துறை ஒரு நல்ல சட்டத்தரணியையும், எமது சமூகம் ஒருபயன் தரு மரத்தையும் இழந்துள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

அன்னாரது மனைவி மகாலக்ஷ்மியையும் அவரின் நினைவாக மகள் மகிமாவையும் விட்டு விட்டு இவ்வுலக வாழ்க்கையினின்றும் விடுபட்டு சென்றுள்ளார்.

அவரது ஆத்மா சாந்தியடைய நான் பிரார்த்திக்கின்றேன்.

இராஜ இராஜேஸ்வரன் தங்கராசா
சட்டத்தரணி
செயலாளர் — சட்டத்தரணிகள் சங்கம் யாழ்ப்பாணம்.
முன்னாள் விரிவுரையாளர் — சட்டக்கல்லூரி கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute From A Teacher

The phenomenon called death has never respected youth, human emotions talent or even our best logical arguements. It had struck where it had willed, in predestined ways, on some unknown law of selection Asokanathan was selected so early in life none of us know why. The sorrows of his young and helpless family and all his dear relatives and friends will live instead, till memory fades. He was a student of mine at Manipay Hindu College for about six and a half years and to record my impressions of Asokan, for such an occasion, is both a Pleasant and a sorrowful task.

Asokan was a very good student throughout his school career He was full of life and energy and was in the midst of every act of mischief that came up for inquiry Yet most of us considered him an obedient student, always quick to confess and repent He was a very jovial lad, full of humour, laughter and light-hearted pranks.

Asokan was an asset, and at the same time a headache in the classroom depending on the subject taught and the teacher who handled the class He thought a lot, asked several questions and expressed himself freely, sometimes not very pleasingly. Such students create serious problems in a class where authoritative teaching is considered necessary. Asok's presence in class gave it a different atmosphere; there was more laughter and more learning, more discussions and more explanations There was very little work for the piece of chalk in my hand and the pen in his It is difficult to forget such boys

It is to Sundarar House that Asokan really belonged He was not seen on the track or the field so much as on the stage. Those were days when each House specialised in presenting particular types of plays. Sundarar House had chosen to present Shakespeare in Tamil. Asokan always opted to play the leading roles and was invariably selected. Once on the stage his frivolity vanished and he was Julius Ceacer, Hamlet, Macbeth, Othello or Shylock up to the hilt. I do not remember to have received any complaint against him from any of those who directed these plays

His death so early in life is most regrettable. His family and his friends can hardly be consoled But that seems to be the only truth of life to which all of us should someday succumb. Let us all join in frequent prayer for the salvation of his Atman.

*Per—Iraivan*

*C. Mahesan* **B. A. (Hons.)**

**JAFFNA HINDU.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசோகநாதன் சட்டத்தரணி அவர்களின்

# இரங்கலுரை

இவர் S. M. S. கந்தசாமி பூமணி அவர்களின் இரண்டாது மகன் ஆவார். இவருடைய அண்ணன் சரநாதன். தம்பியார் மனமோகன். மூவரையும் எனக்கு நன்றாகத் தெரியும். சரநாதன் என்பவர் பொறியியல் வல்லுனர். மனமோகன் கணக்கியல் வல்லுனர் காலஞ்சென்ற சென்ற அசோகன் என்பவர் பேச்சு வன்மை, எழுத்து வன்மையில் தகப்பன் S. M. S. இன் வாரிசு இவர் என்னுடைய பிள்ளைகளோடு 'கிரிக்கெட்' விளையாட சுதுமலை கெல்லாவில் என்னும் இடத்துக்கு வருவார், விளையாட்டிலும், குழப்படி பண்ணி சட்டம் பேசுவார்.

'விளையும் பயிரை முளையில் தெரியும்'' என்னும் முதுமொழிப்படி 'சட்டம்' இவருக்கே சின்ன வயதில் பழக்கப் பட்டது. இவரை நான் ஒரு மரணவீட்டில் சந்தித்தேன். அவர் இப்படியாய் இளவயதிலே தன்னுடைய வாழ்க்கையை முடித்துக்கொள்வார் என்று ஒருவரும் எண்ணியிருக்கவில்லை நான் நடக்க ஏலாமல் நொண்டிக் கொண்டிருக்கும் பொழுது என்னைக் கையில் பிடித்துக் கொண்டு வந்து என்னுடைய வீட்டில் விட்டு இருந்து கதைத்துப் போனார். அப்படியான நல்ல பழக்க, வழக்கம், பண்பாடுகள் நிறைந்தபிள்ளை. இவருடைய மறைவு இவருடையதாய், சகோதரங்களுக்கு மட்டுமல்ல மனைவி, பிள்ளை மற்றும் இவருடைய நண்பர்கள் மற்றும் இவரைச் சார்ந்த எல்லோருக்குமே பெரிய இழப்பு. விசேஷமாக, அவருடைய ஊராகிய சுதுமலைக்கே பெரிய இழப்பாகும்.

ச. விசுவலிங்கம்
இளைப்பாறிய கல்வி அதிகாரி
சுதுமலை.

22—3—86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞன் அசோகநாதன்

''அசோ அசோ'' என்றுதான் திரு. கந்தசாமி அசோக நாதனின் தாயாரும், சகோதரியும் அவரைப்பற்றி கதைக்கும் பொழுது வாஞ்சையோடு குறிப்பிடுவார்கள். அவர் ஒரு பிறவிக் கவிஞர் கலைஞர். அவருக்கு இயற்கையாக அமைந்த இக் கலைத்திறனை வெளிக்காட்ட முடியாமல தற்காலக் கல்வித்திட்டம் அமைந்தது. தமிழ் மக்களின் துர்ப்பாக்கியம்தான். உத்தியோகத்தையும் பொருளீட்டலையுமே பிரதான நோக்கமாகக் கொண்ட இக்காலக் கல்விமுறைக்கிணங்க அவர் சட்டக்கல்வியை கற்றார் ஆனால் அவர் ''A square peg in a round hole'' என்ற ஆங்கிலக் கூற்றை நிரூபிப்பது போல் சட்டத்துறையில் வெற்றி காணமுடியவில்லை.

பாடசாலையில் மாணாக்களுகக் கல்வி பயிலும் காலத்திலும் ஆங்கிலப்பாட நேரத்திலும் கவிகள் இயற்றிக் காட்டுவார். வருடந்தோறும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் July 4th நாடகவிழாவில் சுந்தரர் இல்லம் நடித்த ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் பிரதான பாத்திரம் ஏற்று திறம்பட நடித்து எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றார். யாழ்ப்பாணத்திலேயே தலைசிறந்த நாடக நடிகர் திரு சொர்ணலிங்கம் அவர்கள்கூட அசோகநாதனின் நடிப்பை புகழ்ந்து ''தான்கூட ஷேக்ஸ்பியரின் கதாபாத்திரங்களை இவ்வளவு திறமையோடு நடிக்கவில்லை'' என்று புகழாரம் சூட்டினார். ஒரு சில வருடங்களின் முன்பும் மானிப்பாய் இந்துக்கல்லூரி இல்ல நாடகப் போட்டியில் அசோகநாதன் பழக்கிய நாடகமே முதலிடம் பெற்றது.

கலைத்துறையில் சென்றிருந்தால் அவர் சினிமா உலகிலே பெரும் புகழும் செல்வமும் பெற்று யாழ்ப்பாணத் தமிழருக்கு பெருமை தேடித் தரக்கூடியவராக இருந்திருப்பார்.

''ஊழிற் பெருவலி யாவுள'' என்பது வள்ளுவர் வாக்கு.

தற்பொழுது தோன்றும் வால்வெள்ளி அசோகநாதனையும் கொண்டு சென்றது போலும். அவருடைய ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

**திருமதி விமலா முத்துவேற்பிள்ளை B. A. (Lond)**
*இளைப்பாறிய ஆசிரியர் மா. இ. க.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயின் இறுதிக் கடிதம்

வத்தளை
18/1/86

அசோக அறிவது, அண்ணையின் விசா எனக்கு வந்துவிட்டது. உடன் நான் வெளிக்கிட வேண்டிய நிலை. போறவர்களோடு நான் 21-ம் திகதி செவ்வாய்காலை 5 மணிக்கு புறப்படுகிறேன். ஒருநாளில் அவசரமாக எல்லா ஏற்பாடுகளும் செய்தேன். போன உடன் முதல் வேலையாக உனது அலுவலைப் பார்ப்பேன். கூடிய சிக்கிரம் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்து நான் போய் வருகிறேன்.

இப்படிக்கு
அம்மா
க. பூமணி

## *Brother in Law's Lamentation*

**O GOVINDA!** of what avail to us are a Kingdom, happiness or even life itself, when our beloved Asokan has left us, so Sudden and unexpectedly, leaving us to mourn with no means to drive away the Grief of his loss.

You made us Laugh while you mourned. Echoes of your laughter Lingers on. While you live in peace we are in tears.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோ அண்ணைக்கு *Law Society-London* இல் *Admission* காசு நான் கொண்டு சென்று செலுத்தி ஒரு மாதமும் ஆகவில்லையே! அதற்குள் ஏன் இந்த இடி. அவருக்கு என்ன நடந்தது. என்னுலே தாங்கவே முடியவில்லை. ஓ என்று கத்தி அழ வேண்டும் போல இருக்கிறதே! ஐயனே...!

மூர்த்தி
*(K. VINAYAGAMOORTHY)*
MIDDLESEX
LONDON

---

Mohana,

Please let me know immediately as to what has happened to Aso. In his last letter he has writtern to me that he is comming over here during February.

*VICKY*
LONDON

---

# Thinking of you with Sympathy

To,

Bubby Acca, Athan, Mohana, Bhavani
& Children

"Thinking of you At This Time
And Hoping you will know This Brings you
Deeper Sympathy Than any
Words Can Show."

**GUNAN**
*OMAN*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அண்ணா!

எதை எடுப்பது? எதை விடுவது?
அன்புக்கும் நட்புக்கும் உருக்கொடுத்த நீ—
கற்பனையின் நீட்சியால் விழி ஆறக்கிச் சென்றதென்ன?
உன் மரணத்தின் சோக கீதங்கள், உயிர் நாதமாகி எம்மைப் புலம்ப வைப்பதன் மர்மம் என்ன?

ஆமாம். அங்குதான் உன் வடிவம் நெடிதுயர்ந்த அசோக மரமாகக் காட்சியளிக்கிறது. அதன் கீழ் அமர்ந்தால் நீ அசைத்து, அசைத்து எழுப்புகின்ற கவிதை என்ற நாதம் உன் மனத்தில் ஏக்கம் என்ற கீதமாகி தொண்டையை அடைத்து விழியை ஆறுக்கிச் செல்கின்றது.

கவிதையே உன் உயிர் மூச்சாக நினைந்து கவிதையாகிவிட்டாயே!

கவிதையால் சமுதாயக் கிழிசலைத் தைத்துவிடலாம் என்று கூறினாய்
ஆனால் நீயே கிழிந்துவிட்டாயே!

உன்னைப் பற்றிய நிகழ்வுகள் பின்னோக்கி விரைகின்றன. அங்கு பாடசாலைப் பருவங்கள் தெரிகின்றன. அதில் சுந்தரர் இல்லத்தில் சுந்தரனாக நீயிருக்க, உன்னுடன் நானும் இன்னும் எத்தனையோ நண்பர்களும் ஆடிய நாடகங்கள் எத்தனை. சு. வே. யின் கைவண்ணத்தில் ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோ, மக்பெத் தமிழில் நாடகமாகத் தயாரிக்கப்பட்ட பொழுது எம்முடன் சேர்ந்து அவற்றிற்கு உயிர் கொடுத்து கலையரசு சொர்ணலிங்கத்தின் பாராட்டுதலைப் பெற்ற நீ, வாழ்க்கையும் ஓர் சோக நாடகம்தான் என்று ஆடிக் காட்டிவிட்டு ஓடி மறைந்துவிட்டாயே!

சாந்தி! சாந்தி! சாந்தி!

தம்பி

**-இரா. மகேந்திரசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பழைய மாணவனாக............

அசோகனின் மறைவுச் செய்தி எமது சங்க நிருவாக சபைக் கூட்டம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தான் எமக்கு அறிவிக்கப்பட்டது. அச்செய்தி கேட்டதும் அங்கத்தவர்கள் எல்லோரும் பேரதிர்ச்சி அடைந்தோம். அவரோடு எனக்கேயதபட்ட தொடர்புகளை அசை போட்டுப் பார்த்தேன். நெற்றிக்கு நேரேபிழையை பிழையென்று துணிந்து கூறுபவர்களுள் அசோகனும் ஒருவராவார். பேச்சு வன்மை சிலரோடு கூடிப் பிறந்தது. அதனால் தான் என்னவோ இவர் சட்டத்துறையை தேர்ந்தெடுத்தார் போதும். ஆனாலும் கலைத் தாயின் அருளால் சிறந்த கவிஞனாகவும் ஒப்பற்ற நாடக நடிகனாகவும் பாடசாலை நாட்களிலும் பின்பும் சிறந்து விளங்கினர். 1967ல் பழைய மாணவர் சங்கத்தால் கொழும்பில் மேடையேற்றப்பட்ட 'சிம்மசு சபந்தது' நாடகத்தின் மூலம் தன் நடிப்புத்திறனை கொழும்பு ரசிகர்களுக் கும் தெரியபடுத்தினர். வானொலிக் கலைஞனை இவர் 'தணியாத தாகம்' வாயிலாக இலங்கைத் தமிழர் எல்லோருக்கும் அறிமுகமானார். எமது சங்கம் நிதி வசூலிக்க இவரிடம் செல்லும் போது எல்லாம் மனமுவந்து தன்னால் இயலுமான வரை உதவி செய்தார். இவர் பழைய மாணவர் சங்க ஆயுள் உறுப்பினராவார். இவ்வளவு இளமையிலே இவரது மறைவு இவரது குடும்பத்தாருக்கு மட்டும் அல்லாது மானிப்பாய் கிராமத் திற்கே ஓர் பேரிழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவன் அருள்புரிவாராக.

சி. பத்மநாதன்

செயலாளர் மானிப்பாய் இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

DENMARK
8/3/86

## அன்புள்ள மோகனு,

இன்று எனது மனைவி எழுதிய கடிதத்தில் அசோ உங்களை, எங்கள் எல்லோரையும் விட்டுப் பிரிந்துவிட்டார்; தான் நேரில் சென்று பார்த்த தாகவும் எழுதியிருந்தார். கடிதத்தை வாசித்ததும் நான் அதிர்ச்சி யடைந்தேன். இன்று சாப்பிடக் கூட முடியவில்லை. அசோ எனக்கும், என் மனைவிக்கும் செய்த உதவிகளை என்னால் மறக்க முடியவில்லை. அது மட்டுமல்ல. என்னுடன் தனிப்பட்ட முறையில் கொழும்பில் இருந்த போதும் சரி, பின்பும் சரி என்னுடன் பழகிய நாட்களை எனக்கு உதவிய நாட்களை மறக்கமுடியாது. அசோவின் பிரிவு உங்கள் குடும் பத்துக்கு மட்டுமல்ல, என்னைப் போன்ற பலருக்கும் பெரிய இழப்பா கும். இந்த நேரத்தில் நான் அதிகம் எழுத முடியவில்லை. உம்முடன் உமது அம்மா, அக்கா, அண்ணு, அத்தான் ஆகியோருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தயவு செய்து தெரிவிக்கவும். மகாவிற்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கவும்.

இப்படிக்கு
அன்புள்ள
பொ. பாலகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அசோகநாதனின் கவிதைகளில் இருந்து..............

### தாயன்பு

பூவாட்டம் பிள்ளைதனைப் பட்டணையிற் கிடத்தி
தாலாட்டி முத்தமிட தாங்காத பிள்ளைமுகச்
செவ்விளநீர்ப் பிஞ்சுசிறு நகையரும்ப அன்னையுந்தன்
கங்குலினிற் பால்பொழியும் வெண்ணிலவுச் சித்திரத்தைத்
தூக்கிடுவாள்; தூக்கித் துடியிடையில் வைத்தபடி
பார்த்திடுவாள் உற்று பழரசமாய் ஊற்றெடுக்கும்
செவ்விதழைத் தன்னிதழாற் சுவைத்தபடி பெற்ற

### வேறு

வேதனையை மறந்திடுவாள் பிள்ளை சற்றுயர்ந்து
தேனனைய மழலைமொழி மதலையவன் பேச
கண்ணனவன் தாய்மனதிற் கற்பனைகள் மூள
கள்ளனிவன் காளையென மாறியெந்தப் பெண்ணைக்
கொண்டு வந்தென் எதிர்நிறுத்தித் திருமணத்தை யின்றே
செய்துவிடு என்பானே; பெண்ணொருத்தி வந்து
அத்தை "யிவர் தானெந்தன் அவர்" அன்றி வேறோர்
அயலேதும் எனக்கில்லை என்பானோ என்று
சிந்திக்கச் சிரிப்புளத்தில் உருவாகிக் கொவ்வைச்
செவ்வாயிற் தவழ்கையில்தான் கற்பனையென் றெண்ணிப்
பின்னுமதை அள்ளி நெஞ்சில் அணைத்துமுகத்தஞ் சிந்தும்
அன்னையவள் அன்பினுக்கும் இணையேது முண்டோ.

மானிப்பாய் இந்துக் கல்லூரி
சஞ்சிகை 1967

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் என்னும் சொல்லுக்கு அர்த்தம் கண்டோம்

[''திரு அசோக நாதன் இறந்து சில நாட்களில் இவ்வுலக வாழ்க்கையை விட்டுப் யிரிந்தவரும் முன்னந் ஓய்வு பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபருமாக திரு க. முத்துவேற்பிள்ளை ஓய்வு பெறும் போது அசோகநாதனால் எழுதப்பட்ட கவிதையின் ஒரு சில அடிகள்]

காதினைத் தூர்க்கும் சத்தம் ''கம்'' என அடங்கிப்போகும்
போதினில் தோன்றும் பாலைப் போலொளிர் ஆடைக்கோலம்
காலடி ஓசை கேட்கும் கைவிரல் நடுக்கங் கொள்ளும்
''ஆரிப்ப பாடம்'' என்னும் அதிபரின் குரல்தான் கேட்கும்.

பள்ளியில் மட்டுமல்ல பாதையில் கூட எங்கள்
உள்ளெலாம் கருகிப் போகும் உடம்பெலாம் நடுங்கும் பாதை
பள்ளியாய் மாறும் செஞ்சிற் பணிவுடன் பலமும் தோன்றும்
கொள்ளை போம் துணிவு முற்றும் குறுவியர்த்துளியுங் காணும்

மானிப்பாய் இந்துக் கல்லூரி
மண்மிசை வாழ்தல் வேண்டி
மானிப்பாய் தந்த செம்மல்
வாழ்க முத்து வேற்பிள்ளை

மா. இ. க. முத்துவேற்பிள்ளை வெளியீடு

1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22-02-1986 அமரரான

# திரு. கந்தசாமி அசோகநாதன்

(சட்டத்தரணி)

அவர்களுக்கு

இந்நினைவு மலரைச் சமர்ப்பணஞ் செய்கின்றோம்

கவிதைத்துறை மூலம் தம்மோடு நட்புற்றிருந்த அசோகநாதன் அவர்களின் அமரத்துவச் செய்தி கேட்டு வேதனையுற்ற கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களின் உள்ளத்துணர்வுகள் கவிஞர் அசோகநாதன் பிரிவு தந்த சோகநாதம் ஆக இடம்பெற்றுள்ளன.

இவ்வஞ்சலி மலரை உருவமைக்க உதவியதற்கும் அவர்க்கு எமது குடும்பத்தாரின் இதயபூர்வ நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

- 24-2-86 அன்று ஈமக்கடன் நடந்த போதும் அதற்கு முன்பும் பின்பும் எமக்குப் பலவிதத்திலும் உதவி, செய்த உற்றார் உறவினர் அயலவர் நண்பர் அனைவருக்கும்,
- அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும்,
- சமூகமளித்தவர்கள் சகலருக்கும்,
- அந்தியேட்டி விட்டுக்கிருத்தியங்களில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் எல்லோருக்கும்,

எமது நன்றிக்கடனை மனப்பூர்வமாகச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்புள்ள

தாய் மனைவி, மகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்

---

வேகநாதமாய் மெய்சிலிர்க்கும் இன்கலைகள்
மோகநாதமாய் முழங்கும் புகழ் நியாயவ
சோக நாதனைச் சுடர்ந்தவ நீங்கநீ,
சோக நாதமே துன்னினேம் நெஞ்செலாம்!

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவ

## சுதுமலை மண்டலம் பகுதி பாரம்பரியம் - 1760 - 1986

சின்னையா (சண்டிலிப்பாய்)

மூத்ததம்பி

ஆறுமுகம் - மண்டலம்
(B 1760)

பொன்னு

கனகரத்தினம்
மனைவி
சிவக்கொழுந்து

சரவணமுத்து
B 1860 - D 1922
மனைவி
பொன்னம்மா
B 1868 - D 1953

விசுவலிங்கம்
மனைவி
தங்கமுத்து

இராசம்மா

நாகலெட்சுமி
B 1920

சோமசுந்தரம்
புகையிலைக்
கூட்டுத் தாபனம்
B 1921

கந்தசாமி
புகையிரத நிலைய அதிபர்
B 1904 - D 1952

இரு மனைவிமார்

முருகேசம்பிள்ளை
கச்சேரி சிறப்பர்
B 1906 - 1955
மனைவி
விசாலாட்சி

பாக்கியலட்சுமி
D 1942 (சண்டிலிப்பாய்)

விவாகம் 1944 தையமுத்து (பூமணி)
(மானிப்பாய்) B 1922

விமலசுரேந்திரன்
சட்டத்தரணி
B 1932 - D 1964

சுலோச்சனு
B 1933 கணவன்
தனபாலசிங்கம்
(கூட்டுறவு பரிசோதகர்)

சீதாலட்சுமி
B 1933 - D 1957

நளாயினி
B 1960

பிரபாகரன்
(பொறியியல் மாணவன் ரஷ்யா) B 1965

இரஞ்சித
B 1945
நவரத்தின
(தெல்லிப்
முகாமைய
இலங்கை
B 1940

(B - Birth - பிறப்பு D - Death - இறப்பு)

கோபிராஜ்
B 1972

முரா
B 197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்சர்வளி

986

## மானிப்பாய் கப்பித்தாகடை பாரம்பரியம்

ண்டலம் (சுதுமலை)

பொன்னுச்சி

ம்மா

பாக்கியம்

சிற்றம்பலம்
மானிப்பாய்

தம்பையா (கிளாக்கர்)
B 1897-D1966

தம்பையா மனைவி ஞானவல்லி
(மானிப்பாய்)

செல்லம்மா
B 1897

விவாகம் 1919

ந்தரம்
லைக்
பனம்

**தையல்முத்து**
(பூமணி)
B 1922

கண்ணம்மா
B 1924

வாமதேவி
B 1926

கனகசபை
இ. மத்திய வங்கி
B 1928-D 1975

விக்னேஸ்வரி
B 1938-D1978

பாலகிருஸ்ணன்
B 1941 (மா. இ. க)

## கந்தசாமி - தையல்முத்து (பூமணி)

விவாகம் 1944

இரஞ்சிதம்
B 1945
வரத்தினராசா
(தெல்லிப்பளை)
முகாமையாளர்
இலங்கை வங்கி
B 1940

முரளிராஜ்
B 1974

கிருஸ்ணா
B 1977

சரநாதன்
மாவட்ட பொறியியலாளர்
P. W. D. புருணை
B 1946
இராஜினி
(மானிப்பாய்)
B 1949

பிரேமன்
B 1974

சத்யன்
B 1980

**அசோகநாதன்**
சட்டத்தரணி
B 1948-D1986
மகாலஷ்மி
B 1953

மகிமா
B 1979

மனமோகன்
உபமுகாமையாளர்
இலங்கை வங்கி
B 1949
அமிர்தவல்லி (பவானி)
சுகாதார இலாகா
B 1952

சேந்தன்
B 1979

அருணன்
B 1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமி அச்சகம், 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org